எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும், அவர் கூறிய மற்ற கருத்துகள் பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதியில் கீழ்வேளூர், கீழையூர், புதுச்சேரி, சோழஉத்தியாபுரம் ஆகிய கிராமங்களில் புதிதாக மின்மாற்றிகள் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 24,036 மின்மாற்றிகள் அமைக்கப்பட்ட நிலையில், கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதிகளில் ஆய்வுகள் செய்யப்பட்டு, தேவை ஏற்படின் இந்த ஆண்டு அந்தப் பணிகள் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

238—

நவீன தங்கும் விடுதி

***3230—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு நவீன தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2022 மே 6]

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மண்டைக்காடு பகவதியம்மன் திருக்கோயில் கடற்கரையை ஒட்டியுள்ள திருக்கோயிலாகும். இது கேரளாவிலிருந்து பெண் பக்தர்கள் இருமுடி கட்டி நேர்த்திக்கடனைச் செலுத்துவதற்காக அதிகளவு வருகின்ற ஒரு திருக்கோயில். இந்தத் திருக்கோயிலுக்கு ஏற்கெனவே 10,000 சதுரடியில் Aluminium shed *அமைக்கப்பட்டு, உள்ளே இருக்கின்ற பஜனை மடம் மற்றும் பூஜைகள் செய்கின்ற இடத்தில் கூரைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஓய்வெடுத்து, இளைப்பாறிவிட்டுச் செல்கின்ற சூழ்நிலை இருந்தாலும், நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கிணங்க, அந்த இடத்தில் பழுதடைந்த நிலையிலே இருக்கின்ற கழிவறைகள் மற்றும் பக்தர்கள் தங்குகின்ற 4 அறைகள் ஏற்கெனவே முற்றிலுமாகச் சிதிலமடைந்திருப்பதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு ஒரு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்து, பக்தர்கள் தங்குகின்ற வகையில் 12 அறைகளைக் கட்டுகின்ற பணி வெகுவிரைவில் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்தாபிக்கப்பட்ட மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலுக்கு கேரளாவிலிருந்து, ஆந்திராவிலிருந்து, கர்நாடகாவிலிருந்து மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்வது வழக்கமாக இருக்கிறது. திருவிழாக் காலங்களில் இலட்சக்கணக்கான மக்கள் அங்கே சாமி தரிசனம் செய்ய வருவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 12 அறைகள் உடைய கட்டடங்கள் கட்டித் தரலாம்; தங்கும் விடுதிகளைக் கட்டித் தரலாம் என்று தெளிவாகச் சொன்னார்கள்.*

அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இலட்சக்கணக்கான மக்கள் வந்து தரிசனம் செய்யக்கூடிய திருக்கோயிலுக்குக் குறைந்தது 100 அறைகள் கொண்ட, சாதாரண வகுப்பு மற்றும் குளிர்சாதன வகுப்பு போன்ற அனைத்து வகுப்பினருக்கான கட்டடங்களைக் கட்டினால்தான், அங்கு சாமி தரிசனம் செய்ய வரும் மக்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, கேரளாவிலிருந்து வரக்கூடிய பெண்கள் மற்றும் பக்தர்கள் அங்கே தங்கி தரிசனம் செய்வதற்கு வசதியான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதுமட்டுமல்ல, அங்கே ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றன. அந்த நிலங்களைத் திரும்பப் பெற வேண்டும். சாமி தரிசனம் செய்யக்கூடியவர்கள் பக்கத்திலிருக்கக்கூடிய மண்டைக்காடு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், கேள்விக்கு வரமாட்டேன் என்கிறீர்கள்; அதுதான் பிரச்சினையே! கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: அங்குள்ள கடலுக்குச் சென்று புனித நீராடுவார்கள். அதற்கு வசதியில்லாமல் அலைகள் அதிகமாக இருந்தால், தமது கால்களை நனைப்பார்கள். இப்போது AVM Channel–ல் தண்ணீர் இல்லாத காரணத்தால், அதைத் தூர் வாரி சரி செய்யாத காரணத்தால், அங்கே குளிப்பதற்கு வசதியில்லை. ஆகவே, தரிசனம் செய்ய வரக்கூடியவர்களுக்கு, நீராடி விட்டு தரிசனம் செய்வதற்குரிய ஏற்பாடுகளையும் அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், ஒரே ஒரு விஷயம், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் ஒரு கேள்வி கேட்க வாய்ப்பிருக்கிறது. (குறுக்கீடு) இதற்கொரு பதில் வாங்கிவிடலாம்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: அங்கே 9 மாதங்களுக்கு முன்பு தீ விபத்து ஏற்பட்டது; ஒரு சிறிய சம்பவம் ஏற்பட்டபோது, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தொலைபேசியில் பேசினேன். உடனடியாக அதை ஏற்றுக்கொண்டு, அந்த இடத்திற்கு மூன்று முறை வருகை தந்து ஒன்றேகால் கோடி ரூபாய் நிதியைத் தந்திருக்கிறார்கள். அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு திறமையான அமைச்சர்;

2022 மே 6]

தன்னுடைய கடமைகளைத் திறமையாகச் செய்திருக்கிறார். அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அன்பிற்குரிய அமைச்சர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, கேள்விக்குப் பதில் சொல்லிவிடட்டும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய பாராட்டிற்கு நன்றி. எல்லாப் புகழும் இறைவனுக்கே என்ற வகையில் அனைத்துப் புகழும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கே என்பதைக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மண்டைக்காடு அருள்மிகு பகவதியம்மன் திருக்கோயிலைப் பொறுத்தளவில், 10 நாட்கள் பெருவிழா, மாசி கொடைவிழா என்று ஒரு விழா நடைபெறும். அந்த விழாவிற்குத்தான் அதிகமான பக்தர்கள் வருகை தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையின்படி, இந்த ஆண்டு இறுதிக்குள்ளாகவே 12 அறைகள் ரூ.1 கோடி செலவில் கட்டித்தரப்படும். தொடர்ந்து ஆக்கிரமிப்பிலே இருக்கின்ற இடங்களுக்கு துறையின் சட்டப் பிரிவின் சார்பில்* Section *78* of HR&CE Act*–படி* Notice *அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நீங்களும், அங்கு இருக்கின்ற, இறைவன் பெயராலேயே அமைந்திருக்கின்ற, அந்த அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு தந்தால், அந்த ஆக்கிரமிப்புகளை விரைவில் அகற்றி, அடுத்த ஆண்டிற்கு கூடுதலான கட்டடங்களை பக்தர்கள் தங்குவதற்கு கட்டித் தந்து அனைத்து வசதிகளோடு மேம்படுத்தித் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று செயல்படுத்தப்படும். ஏற்கெனவே ஆண், பெண் இருவரும் பயன்படுத்துகின்ற வகையில் 35 கழிவறைகள் அங்கே பயன்பாட்டில் உள்ளன. (குறுக்கீடு) நீங்கள் இல்லை என்று சொல்லி தலையாட்டுவது தெரிந்துதான், நான் புகைப்படத்தோடு வந்திருக்கிறேன்; உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். 35 கழிவறைகள் பயன்பாட்டிலே இருக்கின்றன. கூடுதலாக வேண்டுமென்றாலும் கழிவறைகளைக் கட்டித் தரலாம். அதோடு கடற்கரைக்குச் சென்று நீராடி விட்டு வருகின்ற பக்தர்களுக்கான உடை மாற்றும் அறைகள் அமைப்பதற்குண்டான ஏற்பாடுகளும் விரைவில் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உண்மைக்கு புறம்பாகச் சொல்லவில்லை.* Temporary *ஆக இருக்கக்கூடிய* bathroom, latrine *தான் இருக்கின்றதே தவிர,* permanent *ஆக இல்லை. அதைச் சரி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே வாகனங்கள் நிறுத்துவதற்குரிய வசதிகளைச் செய்து தரவேண்டும். மேலும், பக்தர்கள் வருகின்றபோது அவர்களுக்கு போக்குவரத்து வசதி சரியாக இல்லை. கடற்கரைப் பகுதியில் வருகின்ற பாதையைச் சரிசெய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.*

அடுத்தபடியாக, ஒரேயொரு question *மட்டும்தான். என்னுடைய தொகுதிக்குட்பட்ட திங்கள்நகரில் ராதாகிருஷ்ணன் கோயில் இருக்கிறது. பிரசித்திபெற்ற இந்தக் கோயிலுக்குப் பின்பகுதியில் அதிக அளவில் இடம் இருக்கிறது. அந்த இடத்தில் மிகவும் பாழடைந்த கட்டடங்கள் இருக்கின்றன. அந்தக் கட்டடங்களை மாற்றி அங்கே மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் ஒரு திருமண மண்டபம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழாக் காலங்களில் கழிப்பிட வசதி போதுமான அளவு இல்லையென்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்றார். விழாக் காலங்களில் நிச்சயமாக தற்காலிகக் கழிப்பிடங்களை ஏற்பாடு செய்து தருவோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட திருக்கோயிலுக்குச் சொந்தமான அந்த இடத்தில், அந்தத் திருக்கோயிலுக்கு வருகின்ற நிதியாதாரத்தைப் பொறுத்து அல்லது அந்த இடத்தில் திருமண மண்டபம் அவசியம் என்று கருத்துரு வழங்கப்படுமானால், வருகின்ற காலங்களில் பரிசீலிக்கப்பட்டு, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு*

2022 மே 6]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.*

திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானாமதுரை தொகுதி, இளையாங்குடி ஒன்றியத்தில் தாயமங்கலம் திருக்கோயில் அமைந்திருக்கிறது. இந்தத் திருக்கோயிலுக்கு சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய கிராமங்களிலிருந்தும், மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், காரைக்குடியிலிருந்தும் பக்தர்கள் மிக அதிகமாக வருகிறார்கள். ஆகவே, அங்கு வரக்கூடிய பக்தர்களுக்கு தங்குகின்ற அறையும், கழிப்பிட வசதியும், அந்தக் கோயிலில் திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்ற காரணத்தினால், அங்கே ஒரு பெரிய திருமண மண்டபமும் கட்டித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே அதிகமான இடவசதி உள்ளது. ஏற்கெனவே தாயமங்கலம் திருக்கோயிலுக்குச் சிறப்பு பூஜைகள் செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கைகளை கனிவோடு பரிசீலித்து எங்கள் தொகுதிக்கு அவற்றை வழங்கவேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில், திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்ற திருக்கோயில்கள், திருவிழாக் காலங்களில் பக்தர்கள் அதிகமாக வருகின்ற திருக்கோயில்கள் என்ற வகையில் கணக்கிடச் சொல்லி, கடந்த ஆண்டு 6 திருமண மண்டபங்களுக்கு 38 கோடி ரூபாயை துறையின் சார்பில் ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியளித்தார்கள். அதேபோன்று, இந்த ஆண்டும் 7 திருமண மண்டபங்கள் 31 கோடி ரூபாய் செலவில் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்வதற்கு அனுமதியளித்திருக்கின்றார். தாயமங்கலம் பகுதியிலே இருக்கின்ற*

[2022 மே 6

திருக்கோயிலுக்கும், சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தபிறகு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, திருக்கோயில் வசம், இடங்கள் இருக்குமென்றால், அந்தத் திருக்கோயில் சார்பில் நிதியாதாரம் இல்லையென்றாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையினுடைய ஆணையாளரின் பொது நிதியிலிருந்து திருமண மண்டபம் கட்டுவதற்குண்டான வழிவகைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. சங்கர், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

239—

நூலகத்தைச் சீரமைத்தல்

***389—திரு. கே.பி. சங்கர்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டில் உள்ள நூலகத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பாகவும், சட்டமன்றத்திலிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும், இன்றைக்கு 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதிக்கொண்டிருக்கின்ற அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சர் என்ற முறையில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தொகுதி, 2–வது வார்டில் பொது நூலகத் துறையின் சார்பாகக் கத்திவாக்கத்தில் ஒரு கிளை நூலகம் 1962 ஆம் ஆண்டிலிருந்து